DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TIRUCHENDUR

| | |
|---|---|
| Name : ராஜதுரை | Father/Husband Name : வேம்படி முத்து |
| Age : 52 | Village : கல்லாமொழி |
| Taluk : | Calling : விவசாயம் |
| Religion : | Caste : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 7th August 2026

(Accused not Present. Petition U/s. 317 Cr.P.C filed and allowed.)

**<u>முதல் விசாரணை</u>** :-

1. நான் கல்லாமொழியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஒன்றிய கவுன்சிலராக இருக்கிறேன்.

2. தேதி, மாதம் நினைவு இல்லை. 2018 ம் வருடம் கருப்பட்டிதொழில் செய்து வருகிறேன். இவ்வழக்கு விபத்து சம்பவத்தில் இறந்து போன பால் ஐசக் என்பவர் எனக்கு தெரியும். விபத்து சம்பவம் நடந்த அன்று இரவு 9.45 மணியளவில் தோட்டத்திலிருந்த போது இறந்து போன பால் ஐசக் மற்றும் அவருடன் இரண்டு நபர்கள் பொலிரோ வாகனத்தில் வந்து அடுத்த வாரம் கருப்பட்டி வேண்டும் என்று பேசிவிட்டு இரவு 10.15 மணியளவில் சென்றார்கள். பின்னர் 15 நிமிடம் கழித்து எனக்கு தெரிந்த நபர் இருசக்கரவாகனத்தில் வந்து கல்லாமொழி அருகே SRF ஐஸ் பேக்டரி தாண்டி இடது பக்கம் விபத்து ஏற்பட்டு வாகனம் பிரண்டு கிடப்பதாக சொன்னார்கள். நான் உடனடியாக இருசக்கரவாகனத்தில் சென்று பார்த்த போது ஐசக் என்பவருடன் சேர்த்து ஒரு நபரும் வாகனத்தின் உள்ளே இருந்தார்கள். மற்றொரு நபர் வெளியே நின்று கொண்டிருந்தார் என்று நினைக்கிறேன்.

3. அப்போது அங்குகூட்டத்திற்கு சென்று வந்த உடன்குடி, சிவலூர், மணப்பாடு சேர்ந்த நபர்கள் வாகனத்திற்குள்ளே இருந்த நபர்களை வெளியே எடுத்தார்கள். வண்டியை ஓட்டிய நபர் கீழேயும், அதற்கு மேல் ஐசக் இருந்தார். பின்னர் அவர்களை எடுத்த நபர்கள் வந்த காரிலேயே மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலிசார் அப்போது அங்கு வந்து விட்டார்கள். ஐசக் இறந்து விட்டதாக கேள்விபட்டேன். விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை</u>**

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Sd. Tr. M. V O Chidambaram,
Judicial Magistrate, Tiruchendur.

True Copy/AS